[1984 மார்ச் 8

வீரநல்லூர் கோமதி மில் தொழிலாளர்களுக்கான கூட்டுறவுப் பண்டகசாலை.

223—(*வினா 16448)— திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்கள் கூட்டுறவுப் பண்டகசாலையில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் அண்மையில் கையாடல் செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

(இ) அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம். சங்கத்தின் முன்னாள் செயலாளர் திரு. பி. அழகிய சுப்ரமணியம் நிதியை முறைகேடாக செலவிட்டுள்ளார். இவர் இப்போது உயிரோடு இல்லை.

(ஆ) மறைந்த திரு. பி. அழகிய சுப்ரமணியம் சங்கத்தின் நிதியை முன்பணம் என்ற போர்வையில் பல்வேறு இனங்களுக்கு ரூ. 14,892.82 கொடுக்கப்பட்டதாக அவர் இறந்த 28-6-82 அன்று வரை நிலுவையில் இருந்தது. அவைகள்.

		ரூபாய்.
(1)	கொள்முதல் முன்பணம் ..	12,311.34
(2)	நிலுவையில் வைத்து அதிக முன் பணம் கொடுத்தது ..	2,588.48
	மொத்தம்	14,899.82

(இ) மறைந்த திரு. பி. அழகிய சுப்ரமணியம் அவர்களின் சட்ட ரீதியான வாரிசுகளிடமிருந்து தொகை முழுவதும் வசூலிக்கப்பட்டு தண்ட வசூல் நடவடிக்கை கைவிடப்பட்டது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரவநல்லூர் கோமதி மில் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையில் முன்னாள் செயலாளர் 14 ஆயிரம் ரூபாய் அளவிற்கு கையாடல் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இப்படி கையாடல் நடைபெறுகிறது என்று தொடர்ந்து புகார் கொடுக்கப்படுகிறது; சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானே சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர் சாகும் வரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, இறந்த பிறகு தான் டிபார்ட்மென்ட் அதிகாரிகள் விசாரணைக்கு வந்து கையாடலை கண்டுபிடித்து இருக்கிறார்கள். இப்படி காலங்கடந்த முறையிலே நடவடிக்கை எடுத்த அதிகாரிகள்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, கையாடல் செய்யப்பட்டதாக குறிப்பிட்ட 14 ஆயிரம் சொச்சம் ரூபாய் அவர் இறந்ததற்கு பிறகு அவருடைய வாரிசுதாரர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்தச் சங்கத்தின் மீது எப்போது புகார் சொல்லப்பட்டது, எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கான விவரங்கள் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் புகார் கொடுத்த தேதி மற்ற விவரங்களைக் கொடுத்து தனியாகக் கேள்வி கேட்டால் பதில் தரலாம்.

கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் மூலம் வெட்டப்படும் கிணறுகள்.

(224 —*வினா 16566)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :—மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார்கள் கடன்பெற்று கிணறு பொய்த்துவிட்டால் கடன் முழுவதும் ரத்து செய்வது போல், கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்கள் வெட்டும் கிணறுகள் பொய்த்தவற்றுக்கும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தனியார்கள் கிணறு வெட்டுவதற்காக நிலவள வங்கிகள் மூலம் பெறும் கடன் முழுவதும் ரத்து செய்யப்படுவதில்லை, பொய்த்த கிணறுகள் மான்ய விதிமுறைகளுக்கு உட்பட்டு ஒரு குறிப்பிட்ட விழுக்காடு மட்டுமே ரத்து செய்யப்படுகிறது. இவ்விதிமுறைகளின் படி கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகங்களுக்கு அளிக்கப்படும் கடன்களும் ரத்து செய்யப்படுகின்றன.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கிகளிலே கிணறு வெட்டுவதற்காக கடன் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படுகிற கடன் மூலம் வெட்டப்படுகிற கிணறுகள் பொய்த்து விட்டால் கடன் முழு